தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.
ந.க.எண். 5157 /அ1/2018 –2, நாள். 10.09.2018.

------

பொருள் : பள்ளிக்கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் – சிறுபான்மை அந்தஸ்து கோரியமை – பட்டியலில் உள்ள சிறுபான்மை பள்ளிகளை ஆய்வு செய்து அறிக்கை அளிக்கவும் – அப்பள்ளிகளில் சிறுபான்மை மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் சதவீதம் உறுதி செய்யக் கோருதல் – சார்பு.

பார்வை
1. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 5157 /அ1/2018, நாள். 03.09.2018.
2. சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் அறிக்கை.
3. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை ஆய்வுக்கூட்டம் நாள்:10.09.2018.

------

பார்வை 1இல் காணும் இயக்குநரின் செயல்முறைகளின் வாயிலாக சிறுபான்மை அந்தஸ்து கோரும் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை மற்றும் சதவீதம் கோரப்பட்டு பார்வை 2இல் காணும் சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பார்வை 3இல் காணும் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள சிறுபான்மை அந்தஸ்து கோரும் மெட்ரிகுலேசன் பள்ளிகளை சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து குறிப்பான பரிந்துரையுடன் அறிக்கையை உரிய ஆவணங்களையும் 20.09.2018க்குள் இரு பிரதிகளில் தவறாமல் அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பார்வை 2இல் காணும் முதன்மைக் கல்வி அலுவலர்களின் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி அப்பள்ளிகளின் மொத்தம் மாணவர்களின் எண்ணிக்கை, சிறுபான்மை மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பள்ளியின் சிறுபான்மை மாணவர்களின் சதவீதத்தினை உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:
1. பள்ளிகளின் பட்டியல்.
2. படிவம்

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்:
சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நகல்
அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

D:\ind\A1\common.docx